Pachai Mayil Vahanane

Muruga · Tamil

பச்சை மயில் வாஹனனே
சிவ பாலசுப்ரமண்யனே வா
என் இச்சை எல்லாம் உன்மேலே வைத்தேன்
எள்ளளவும் பயமில்லையே

கொச்சை மொழியானாலும்
உன்னை கொஞ்சி கொஞ்சி பாடிடுவேன்
எந்தன் இச்சையெல்லாம் அகன்றதப்பா
எங்கும் சாந்தி நிலவுதப்பா

நெஞ்சமதில் கோவில் அமைத்தேன்
அதில் நேர்மை எனும் தீபம் வைத்தேன்
கொஞ்சிடவே வா வா முருகா
சேவற் கொடி மயில் வீரா

வெள்ளம் அது பள்ளம் தனிலே
பாயும் தன்மை போல் உள்ளம் தனிலே
நீ மெல்ல மெல்ல புகுந்து விட்டாய்
எங்கள் கள்ளம் எல்லாம் கரைந்ததப்பா

அலைகடல் ஓரத்திலே
எங்கள் அன்பான ஷண்முகனே
அலையா மனம் தந்தாய்
உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்